[1972 மார்ச் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி ' சூளூரிலுள்ள அரசு மருத்துவ மனையைப் பற்றியது. இந்தத் துணைக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

கீழத்தூவலில் ஆரம்ப சுகாதார நிலையத்துக்குக் கட்டடம்

* 179. வினா—திரு. எஸ். காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம் கீழத்தூவல் என்னும் ஊரில் பிரதம சுகாதார நிலையத்திற்கு புதுக் கட்டடம் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால், அந்தக் கட்டடம் எப்போது செயல் படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். காதர் பாட்சா என்ற வெள்ளைச்சாமி : நீண்ட கால மாக கீழத்தூவலில் ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டும் கட்டடம் இல்லாத பெருத்த கஷ்டமான நிலையில் இருக்கிறது. ஆகவே, அங்கு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையம் அங்கே ஆரம்பிக்கப்பட்டது 1967-ம் ஆண்டில். எந்த ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டாலும், கட்டடம் கட்ட ஏறத்தாழ இரண்டு லட்ச ரூபாய் தேவை. அந்த இரண்டு லட்ச ரூபாய் அரசாங்கம் செலவழிப்பதென்பது—ஆண்டுக்கு பத்து அல்லது இருபது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான கட்டடங்கள் கட்டுவது என்ற அடிப் படையில் ஏறத்தாழ 150 முதல் 200 வரை கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. இன்னும் 200 இடங்களில் கட்டி முடிய வில்லை. கீழத்தூவலில் ஐந்தரை ஏக்கர் அரசாங்கப் புறம்போக்கு நிலம் கிடைத்திருக்கிறது. ஆனால், அதற்காகப் பஞ்சாயத்து ஒன்றியமோ அல்லது பொது மக்களோ பத்தாயிரம் ரூபாய் கட்ட வேண்டும். அது இதுவரையில் கட்டப்படவில்லை. அது

1972 மார்ச் 3]

கட்டியதற்குப் பின்னுலும்கூட, கவனிக்கப்படுவதற்கு சிறிது காலதாமதம் ஆகத்தான் செய்யும். அதைக் கட்ட கனம் உறுப்பினர் அவர்கள் அந்தப் பொதுமக்களுடைய ஒத்துழைப்பைப் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், கிழத்தூவல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு கிராமம் ஆகும். ஏனென்ருல், அங்குதான் 57 ஆம் ஆண்டிலே 5 பேர்கள் கட்டிவைத்து சுடப்பட்டார்கள். அது பின் தங்கிய பகுதியாக இருக்கக்கூடிய காரணத்திஞலே மற்ற பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கக்கூடிய வசதிகளைவிட அதிகமாகக் கவனித்து—ஏற்கனவே 5 ஆண்டுகள் ஆகிவிட்ட காரணத்தினுலே—சீக்கிரத்திலே பிரதம சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கேள்வியிலே அங்கிருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டடம் கட்டுவதற்கு திட்டமுண்டா என்று கேட்கப்பட்டிருக்கிறது, அங்கே சுடப்பட்டதாக அவர்கள் சொன்னுர்கள், சுடப்பட்டவர்களை அந்த நிலையத்தின் மூலம் காப்பாற்ற முடியாது, தப்பித் தவறிக் காயம் ஏற்பட்டவர்களைத் தான் காப்பாற்ற முடியும். அங்கே தற்பொழுது ஆரம்பச் சுகாதார நிலையம் ஆரம்பிக்கப்பட்டு மருத்துவ வசதிகள் வழங்கப் படுகின்றன. கட்டடம் அரசாங்கத்தினுடைய கட்டடமாக இல்லாவிட்டாலும்கூட வேறு கட்டடத்தில் அது இப்பொழுது நடைபெற்று வருகிறது.

திரு. சொ. காவேரி மணியம் : தலைவர் அவர்களே, இப்பொழுது ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு பிரைமரி ஹெல்த் சென்டர்தான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் பொழுது பொதுமக்கள் பத்தாயிரம் ரூபாய் நிதி திரட்டிக் கொடுத்தால் கட்டடம் கட்டித் தருவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யும் என்று சொன்னுர்கள். ஆகவே, பேரூராட்சி மன்றங்கள் 10 ஆயிரம் ரூபாய் நிதி திரட்டித் தருவதாக இருந்தால் அரசு அம்மாதிரி முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது பற்றி நான் முன்னலேயே விரிவாக ஆராய்ந்திருக்கிறேன். இரண்டு விதமான கருத்துக்கள் இருக்கின்றன. மருத்துவ மனைக்குக்

கட்டடம் கட்டுவது என்றால் ஏறத்தாழ 2 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. கட்டிய பிறகு அதை நடைமுறைப்படுத்து வதற்கு அரசாங்கத்திற்கு ஆண்டுக்கு 50 ஆயிரம் ரூபாய், 75 ஆயிரம் ரூபாய் வரையில் செலவாகிறது. நடைமுறைச் செலவுகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் புதிய மருத்துவ மனைகளை உருவாக்குவதற்கு பஞ்சாயத்துக்கள் அவைகளை விரும் பினால் அதற்கான செலவை ஈடுகட்டுகிற வகையில் தொகை அளிக்க வேண்டும். பத்தாயிரம் ரூபாய் என்பது போதுமான தொகை யல்ல. அது ஒரு அடையாளத் தொகைத்தான். இனி கேட்கப் படப் போவது ஈட்டுத் தொகையாகக் கேட்கப்படும்.

வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு குடியிருப்புகள்

* 280 வினா.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

குடியிருப்பு மனை அற்ற விவசாயத் தொழிலாளர்கட்கு குடி யிருப்பு மனைகள் வழங்கி அவற்றில் வீடு கட்டும் பொறுப்பை சீரணிப் படையிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: தலைவர் அவர்களே, குடியிருப்பு மனையற்ற விவசாயத் தொழிலாளர்கட்கு குடியிருப்பு மனைகள் வழங்கியிருப்பதில் வீடுகட்டும் பொறுப்பை சீரணிப் படையிடம் ஒப்படைக்கும் உத்தேசம் அரசுக்கு தற்பொழுது இல்லை. ஆனால் சீரணிப் படையினர் மக்களுக்குப் பயன்படும் வகையில் பள்ளிக்கூடங்கள், குளங்கள், கால்வாய்கள் சீரமைத்தல், சாலைகள் அமைத்தல் போன்ற பணிகளிலே ஈடுபட்டு வருகிறார்கள். தனிப்பட்டவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பணிகளில் அவர்கள் ஈடுபடுவதில்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தச் சீரணிப் படையின் மூலமாக பலவகையான பணிகள் மிக சிக்கனமாகவும் அதே நேரத்திலே சிறப்பாகவும் அமைகின்ற காரணத்தினால் கீழத் தஞ்சையைப் பொறுத்த வரையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் குடியிருப்பு மனைகளிலே